கோடியாக இருந்தது 1985-86 இல் ரூ.451 கோடியாக உயர்ந்துள்ளது.

*நிறைவுரை:* பல்வேறு கோணங்களில் பொதுத்துறை நிறுவனங்கள் இந்தியப் பொருளாதார வளர்ச்சிக்குத் துணை செய்து கொண்டிருப்பதைக் கண்டோம். மொத்தத்தில் பொதுத்துறையின் வளர்ச்சி குறிப்பிடத்தக்க வகையில் அமைந்திருப்பதைக் காண்கின்றோம்.

## III. பொதுத்துறை நிறுவனங்களின் குறைபாடுகள்

இந்தியப் பொதுத்துறை நிறுவனங்கள் சிலவற்றில் குறிப்பிடத்தக்க சாதனைகளைச் செய்தபோதிலும், அவற்றின் நடை முறையில் சில சுட்டிக்ககாட்டக்கூடிய குறைகள் உள்ளன. அவற்றில் முக்கியமானவற்றைத் தொகுத்துக் கூறலாம்.

**1. சொந்தக்காலில் நிற்க இயலாமை:** பெரும்பாலான பொதுத்துறை நிறுவனங்கள் மிகக் குறைந்த ஆதாயத்திலோ, அல்லது நட்டத்திலோ செயல்படுகின்றன. சில குறிப்பிடத்தக்க நிறுவனங்கள் தான் இலாபத்தில் வாழ்கின்றன; வளர்கின்றன. மத்திய அரசுக்கு சுமையாகின்ற வகையில் பல பொதுத்துறை நிறுவனங்கள் நட்டப்படுவது கவனிக்கத்தக்கது. மொத்த பொதுத்துறை நிறுவனங்களின் முதலீட்டோடு ஒப்பிட்டால் கிடைக்கின்ற இலாபம் ஒரு சதவிகிதமாக இருக்கின்றது.

பொதுவாக மத்திய அரசின் பெரிய பொதுத்துறை நிறுவனங்கள் இலாபத்தில் நடைபெறுகின்றன. மத்திய அரசின் துறை சாரா பொதுத்துறை நிறுவனங்கள் 1989-90 இல் ரூ.3,789 கோடி இலாபம் தேடின. 1989-90 இல் இரயில் போக்குவரத்துத் துறையின் இலாபம் ரூ.140 கோடியாக இருந்தது. 1991-92 இல் ரூ.435 கோடியாக உயர்ந்தது. அஞ்சல் தந்தி-செய்தித் தொடர்புத் துறையின் ஆதாயம். 1987-88 இல் ரூ. 263 கோடியாக இருந்தது. 1989-90 இல் ரூ.788 கோடியாக உயர்ந்தது. 1992-93 இல் 237 பொதுத்துறை நிறுவனங்களில் 131 நிறுவனங்கள் ரூ. 7, 346 கோடி இலாபம் ஈட்டின. மாநில அரசுகள் நடத்தும் பொதுத்துறை நிறுவனங்கள் அடைந்த நட்டம் 1987-88 இல் ரூ.2,493 கோடியாக இருந்தது. 1989-90 இல் ரூ.4,717 கோடியாக உயர்ந்திருக்கின்றது.

மொத்தத்தில் பொதுத்துறை நிறுவனங்கள் நட்டப்படும் நிலைமாறி, இலாபம் பெறவில்லை என்றால் அவற்றால் தொடர்ந்து செயல்பட முடியாது. இப்பொழுது பொதுத்துறை பற்றி அரசின் கொள்கை மாறியிருப்பதற்கு இதுதான் முக்கியமான காரணமாகும்.

**2. திறமையின்மை:** பொதுத்துறை நிறுவனங்கள் பெரும்பாலும் திறமையற்ற நிர்வாகத்தினால் முழுமையாகச் செயல்படாமல் இருக்கின்றன. பொதுத்துறை நிறுவனங்களை நிர்வகிப்பவர்கள் அரசின் அதிகாரிகள். இவர்கள் தொழில் துறையில் வேண்டிய அனுபவமோ, ஏற்ற பயிற்சியோ பெறாதவர்கள். இவர்களால் தொழிலின் நுட்பங்கள் அறிந்து செயல்படமுடியவில்லை. மேலும், இவற்றில் பணியாட்களைத் திறமையினடிப்படையில் மட்டும் சேர்ப்பதில்லை. வேறுபல அடிப்படையில் வேலையாட்களைத் தெரிவுசெய்கின்றனர். இதில் அரசியல் தலையீடும் ஊடுருவி நிற்கின்றது. இதனால் பொதுத்துறையில் கீழ்மட்டத்திலிருந்து மேல்மட்டம் வரை திறமையின்மையின் விளைவுகள் வெளிப்படுகின்றன.



**3. அரசியல் சக்திகளின் தலையீடு:** தொழில் நிறுவனங்களை பொதுத்துறையில் அமைக்கின்ற பொழுது இடங்களை நிர்ணயிப்பதில் தேவையற்ற அரசின் தலையீடு இருக்கின்றது. சக்திவாய்ந்த ஆளுங் கட்சியின் அரசியல் தங்களது மாநிலங்களில் அவை ஏற்றவைகளாக இல்லாமல் இருந்தபோதிலும், அமைக்கச் செய்கின்றனர். ஏற்ற இடமாக இல்லாததால் தொழில்கள் எதிர்பார்த்தது போல் செழித்து வளர்வதில்லை. இதனால் முதலீடும் முயற்சியும் பல சமயங்களில் வீணாகின்றன.

**4. அமைப்பதில் காலம் தாழ்த்துதல்:** பல பொதுத்துறை நிறுவனங்களை முதலில் திட்டமிட்டபடி உரியகாலத்தில் அமைப்பதில்லை. இதனால் அதற்காகும் செலவும் கணிசமாகக் கூடி விடுகின்றது. எடுத்துக்காட்டாக, டிராம்பே உரஉற்பத்தி நிறுவனத்தை (Trombay Fertillizer Project) 1959 இல் மூன்றாண்டு காலத்தில் ரூ.27 கோடி செலவில் அமைக்கத்திட்டமிட்டனர். ஆனால் அத்திட்டத்தை முடிக்க ஆறு ஆண்டுகளுக்கு மேல் ஆனது. 1965 இல் அத்திட்டத்தை ரூ.40 கோடிச் செலவில் முடித்தனர். இது பொதுத்துறை சரியாகத் திட்டமிட்டு விரைவாக நடத்தவில்லை. என்பதையே காட்டுகின்றது.

**5. மூலதனச் செறிவுள்ள தொழில்கள்:** பெரும்பாலும் பொதுத்துறையில் மூலதனச் செறிவுள்ள கனரக, அடிப்படை பெருந் தொழில்களையே தொடங்குகின்றனர். அதனால் இவற்றில் உருவாகும் வேலைவாய்ப்புக் குறைவாகவே இருக்கின்றது. நாட்டில் ஏற்பட்டிருக்கும் வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்க்க பொதுத்துறை நிறுவனங்களால் இதனால் தான் எதிர்பார்த்த அளவில் உதவமுடியவில்லை.

**6. கடுமையான, தவறான கட்டுப்பாடுகள்:** பொதுத்துறை நிறுவனங்களின் நடைமுறைகளை நிதித்துறை. நாடாளுமன்றம் ஆகியவை கட்டுப்படுத்துகின்ற முறைகள் கடுமையாகவும் தவறானவைகளாகவும் இருக்கின்றன. நிதிக்கட்டுப்பாடுகளும் தணிக்கைக் கட்டுப்பாடுகளும் மிகவும் அதிகமாக இருப்பதால் பொதுத்துறை நிறுவனங்களால் சுதந்திரமாகச் செயல்பட முடியவில்லை. இதனால் அவற்றிடம் முழு வளர்ச்சி ஏற்படவில்லை.

Scanned with CamScanner